



முத்தமிழறிஞர் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை துறைமுகம் தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் இந்து சமய அறநிலைத்துறைஅமைச்சர் , சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி ஏழை எளிய மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். உடன் மேயர் பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்ர.விச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, கவுன்சிலர் வெ.பரிமளம், வட்டச் செயலாளர்கள் கே.கவியரசு. க. ராஜா என்கிற கதிரவன், எம்.பரத்குமார், ஜி.ராமமூர்த்தி, பார்த்திபன், டி சதீஷ்குமார், ஆர்.கலைச்செல்வி செந்தில்குமார். ரமேஷ் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.





சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், 2000 பேருக்கு மதிய உணவினை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், சாந்தி பக்தன், டி.ஏ.ராஜ், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, எஸ்.பாஸ்கர், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்லி, ம.ஜெயராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் கிழக்கு மாவட்டக் கழக

# பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஆக. 8 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் நாளை ( 09.08.2025 - சனிக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு நகர , ஒன்றிய, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல், ஆக. 8-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் எனது தலைமையிலும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும்; திருச்செங்கோட்டிலுள்ள நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (08.08.2025-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.



அதுசமயம் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற உள்ளார். ஆகவே இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி எழும்பூர் தெற்கு பகுதி 58வது வட்ட திமுக சார்பில் வட்ட கழக செயலாளர் வி.விஜயகுமார் தலைமையில் பகுதி செயலாளர் வி.சுதாகர் முன்னிலையில் அலங்கரிகப்பட்ட கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., கே.எஸ்.எம்.நாதன், ரசூல், ஜெகதீசன், நித்யராஜ், ஜெ.கார்த்திகேயன் எம்.முத்து, பாபுசேகர், நசீமா, மாறன், பிச்சைமுத்து, அறிவுநிதி, முரளிகுமார், ரய்மான், ஆர்.கோபி, ராஜ்பரத், ஷேக்பரித், வி.மில்லர், எஸ்.மதன், ஜி.டோம்னிக், வி.பிரபு, டி.ராஜா, மீனாட்சிசுந்தரம், ஐ.சூர்யா, குமரகுரு, துளசிங்கம், சிராஜ், புஸ்பராஜ், ஜாவித், மைக்கல், கோபி, மகளிர் அணி ராணி,தீபா, பூங்கொடி, வசந்தி, செண்பகம்,ஏஜிலி, ஆர்.விஜய், எம்.கார்த்திக் மற்றும் BLA2, BDA, BYA உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் அலமாதி ஊராட்சியில் கடந்த 05.08.2025 அன்று நடைப்பெற்ற உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெற்ற 3000 பயனாளர்களுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனைப்படி மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வை அலமாதி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கெ தமிழ்வாணன் ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையேற்று பயணாளிகளுக்கு அறுசுவை வழங்கினார்..இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆ.து.மணி, மு.ராஜேசேகர், முகமதுஅலி, செ.முனுசாமி, கு.கலைவாணன், ஆ.முனுசாமி, சன்சேகர், வாசு, ர. பிரமே, பக்ரி, ரவி, கெ.தமிழ்ழகன், ப.தட்சணமூர்த்தி, சு.புருஷோத்தமன், சந்திரன், பத்மநாபன், மு.அன்பு,வரதன், ர.ரூபேஷ், மு.கவின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

கிருஷ்ணகிரி, ஆக. 8 -

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்எல்ஏ அவர்களது தலைமையில் கிருஷ்ண கிரி, பெங்களூர் சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகிலிருந்து அமைதி பேரணி ராயக்கோட்டை மேம்பாலம் அருகே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் டி. செங்குட்டுவன், இ.ஜி. சுகவனம், வெற்றிச்செல்வன், நாகராஜ், டேம் வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

## சென்னை கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில்

# 1000 மருத்துவ பயனாளர்கள் உடன் தங்குபவர்களுக்கு போர்வைகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தி வழங்கினார்!

சென்னை, ஆக.8-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (07.08.2025) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு தினத்தினையொட்டி, அம்மருத்துவமனையில் மருத்துவ பயனாளிகளின் உடன் இருக்கும் 1000 பேருக்கு போர்வைகளை வழங்கினார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு தினத்தினையொட்டி, சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம், வேளச்சேரி, மதுரவாயல் ஆகிய 5 சட்டமன்ற தொகுதியில் 1000 இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதோடுமட்டுமல்லாமல், இன்று காலை அவரது திருவுருவ சிலை அமைந்துள்ள சைதாப்பேட்டை பஜார்சாலை, அப்துல்ரசாக் சாலையில் உள்ள திருவுருவ சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இலட்சக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்ட பேரணியில் சென்னை தெற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து சென்னை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞரின் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து இந்த மருத்துவமனையிலும், இதே வளாகத்தில் அமைந்துள்ள தேசிய முதியோர் மருத்துவமனையிலும் இருக்கின்ற மருத்துவ பயனாளர்களுடன் தங்குகின்ற ATTENDERS என்று சொல்லக்கூடிய உடன் தங்குபவர்களுக்கு போர்வைகள் 1000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல் சென்னை தெற்கில் இன்னுமொரு நிகழ்வு என்கின்ற வகையில் முத்தமிழறிஞருக்கு இசை அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று மாலை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற இருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் பல்வேறு பரிமாணங்களை கொண்டவர். ஏறத்தாழ 47 திரைப்பட பாடல்களை எழுதியிருக்கிறார்கள். அவர் எழுதிய முத்தான பாடல்களை இசையமைத்து பாடும் நிகழ்வு இன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற இருக்கிறது.

அந்த நிகழ்ச்சியில் மூத்த இசைக்கலைஞர்கள் எல்.ஆர்.ஈஸ்வரி, சங்கர் கணேஷ், சீர்காழி சிவசிதம்பரம், தீபன் சக்கரவர்த்தி, எஸ்.ஏ.ராஜ்குமார், மாலதி, செந்தில்ராஜ் போன்ற பல்வேறு திரை இசை பிரபலங்கள் பாட உள்ளார்கள். முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பு சேர்க்க இருக்கிறார்கள்.

**"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடர்பான கேள்விக்கு**

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்திற்கு உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். உச்சநீதிமன்றம் சரியான பதிலடி கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்திலிருந்தே முதலமைச்சரின் பெயர்களை திட்டங்களுக்கு வைப்பது வழக்கமான ஒன்று. எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் என்று பெயர் வைத்தார்கள்.

கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா அவர்களின் பெயரைக் கொண்டு அம்மா உணவகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர் என்று ஏறத்தாழ 100க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு அவரது பெயரினை வைத்தார்கள். நிரந்தர திட்டங்களுக்கு பெயர் வைப்பது என்பது கடந்து சாலை ஓரங்களில் சிறிது சிறிதாக கட்டப்படும் சாலையோரப் பூங்காக்களுக்கு கூட அம்மா பூங்கா என்றெல்லாம் கூட பெயர் வைத்தார்கள். இதை யாரும் கேள்வி கேட்கவில்லை. ஆனால் இன்று நலம் காக்கும் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் தொடர்ந்து பல இலட்சம் பேருக்கு நன்மை அளித்து வருகின்றது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். இன்றைக்கு உச்சநீதிமன்றத்தின் அமர்வு சரியான தீர்ப்பை தந்திருக்கிறது. ரூ.10 இலட்சம் அபராதம் செலுத்த சொல்லியிருக்கிறார்கள். அந்த அபராதம் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கிறது. எந்த நலத்திட்டம் வேண்டாம் என்று அவர் இன்று உச்சநீதிமன்றத்திற்கு சென்றார்களோ அவருடைய சொந்த பணத்திலிருந்து ரூ.10 இலட்சம் அபராத தொகை அரசு நலத்திட்டத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்கின்ற உச்சநீதிமன்ற உத்தரவு இதுபோன்றவர்களுக்கு சரியான பதிலடி என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் களக்காடி எல்லப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் கழக முன்னணியினர் உடனிருந்தனர்.





சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 139 (அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இலக்கிய அணியின் மாவட்ட புரவலர் சைதை எம்.எஸ்.மணி தலைமையிலும், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, வட்ட செயலாளர் சை.மு.சேகர் முன்னிலையில் தலைவர் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள். இந்நிகழ்வில் வட்ட கழக நிர்வாகிகள் மா ஏழுமலை, பூபதி வெங்கடேசன், கொடிசுரேஷ் புருஷோத்தமன், நியூகாலனி சம்பத் பாமோ கார்த்திக் கழக எஸ்.ரமேஷ், முருகன், மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார் தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் மு.மனோகரன் முன்னிலையில் தமிழினத்தின் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினோம். இந்த நிகழ்வில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எம்.பார்த்திபன், வட்டக் கழக செயலாளர் எம்.சாந்தப்பன், வட்ட அவைத்தலைவர் பெ.பார்த்தசாரதி, வட்ட துணை செயலாளர் கே.ராமு, பகுதி மாணவரணி அமைப்பாளர் தி.சண்முகராஜன், துணை அமைப்பாளர்கள், கு.சரண் ராஜேஷ், இளைஞர் அணி ரா.செந்தில் மற்றும் கழக தோழர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 57 (அ) வட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை தலைமையில் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி, பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்ட பிரதிநிதி டி.எஸ்.சேகர், கே.ஜி.துளசிராமன், சி.காந்தி, டி.வேலு, பா.முத்துக்குமார், கேபிள் சங்கர், பிண்ட்டு ஜெயின், ஜெ.ஹரிக்குமார், சு.அண்ணாதாசன், பா.நடராஜ், ஆர்.வேலாயுதம், டி.சேகர், கொத்தவால்சாவடி கணேசன், எம்.சாய்பவன்குமார், டி.சண்முகம், எம்.உதயா மற்றும் பலர் உள்ளனர்.